## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 74/2020.
Prosecution witness for P.W. 27 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. கஜேந்திரன். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.02.2026.

A2 died. A1 present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம், கொப்பம்பட்டி காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு தட்டார்மடம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது கூடுதல் பொறுப்பில் மெஞ்ஞானபுரம் காவல்நிலையத்தையும் பார்த்து வந்தேன். 28.01.2019 அன்று நிலைய குற்ற எண் 9/2019 இதச 307 பிரிவின் படியான அ.சா.ஆ 21 வழக்கை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றே காலை 8 மணியளவில் அ.சா.21 மூலம் அ.சா.ஆ 21 வழக்கை சம்பவ இடத்தில் பெற்று அன்றே காலை 8.15 மணி முதல் 9.45 மணி வரையில் சம்பவ இடத்தில் அ.சா.12 மற்றும் 13 முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயாரித்தேன். அவை முறையே **அ.சா.ஆ 25 மற்றும் 26**. மேலும் சம்பவ இடத்தில் ரத்தம்பட்ட மண், ரத்தம்படாத மண் மற்றும் விகேசி பிரைடு என்று எழுதப்பட்ட செருப்பு ஒரு ஜோடி ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ 27**. சம்பவ இடத்தில் அ.சா.1-ஐ விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றே

11.15 மணியளவில் மேற்படி வழக்கில் காயம்பட்ட வில்வின் ரெஜிஷ் இறந்துவிட்டார் என்ற தகவலை 11.55 மணிக்கு கிடைக்கப்பெற்று தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு வந்து இறப்பு தகவலைப் பெற்று 16 மணியளவில் நிலையம் வந்து இந்த வழக்கை இதச 302ன் படி பிரிவு மாற்றம் செய்து அறிக்கை தயாரித்தேன். அந்த அறிக்கை **அ.சா.ஆ 28**. அதை அ.சா.22 மூலம் துரித தபாலாக சாத்தான்குளம் நீதித்துறை நடுவருக்கு அனுப்பி வைத்தேன். அன்றே அ.சா.1–ஐ மீண்டும் விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். 29.01.2019 அன்று தூத்துக்குடி அரசு மருத்துவமனை வந்து காலை 8 மணி முதல் பஞ்சாயத்தார் முன்னிலையில் காலை 10 மணி வரையில் பிரேத விசாரணை செய்து அறிக்கை தயாரித்தேன். அந்த அறிக்கை **அ.சா.ஆ 29**. பிறகு சாட்சிகளான அ.சா.5, அ.சா.4 விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அ.சா.1 –ஐ மீண்டும் விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். பிறகு பிரேத விசாரணை முடிந்த பிறகு அ.சா.9, அ.சா.10, அ.சா.6, அ.சா.7, அ.சா.8 ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். மேலும் அ.சா.1னின் மகளான அ.சா.2–ஐ விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிறகு பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக வேண்டுகோள் கடிதத்துடன் அ.சா.23 மூலம் பிரேதத்தை காலை 10.15 மணியளவில் அனுப்பினேன். அ.சா.23 பிரேத பரிசோதனை சமயத்தில் மருத்துவருடன் இருந்து பிரேதத்திலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட சா.பொ.2 முதல் 4 வழக்கு சொத்துக்களான லுங்கி, ஜட்டி, சட்டை ஆகியவற்றை பெற்று நிலையம் கொண்டு வந்து என்னிடம் ஒப்படைத்தார். மேலும் பிரேத பரிசோதனை சமயத்தில் பிரேதத்திலிருந்து சேகரிக்கப்பட்ட உள்ளுறுப்புகளையும், மாதிரி ரத்தத்தையும் பெற்று நிலையம் கொண்டு வந்து என்னிடம் ஆஜர் செய்தார். இந்த வழக்கு சொத்துக்களை படிவம் 91ன் மூலம் மேற்படி

நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவங்கள் 91 **அ.சா.ஆ 30 வரிசை** (எண்ணிக்கையில் 4). மேற்படி ரத்தம்பட்ட மண், ரத்தம்படாத மண் மற்றும் ஒரு ஜோடி செருப்பு ஆகியவை ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட சா.பொ.5 முதல் 7. உள்ளுறுப்புகளையும் மேற்படி நீதிமன்றத்தில் ஒப்படைத்துவிட்டேன். பிறகு மேற்படி உள்ளுறுப்புகளை ரசாயன பகுப்பாய்விற்காக திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்ப வேண்டுமென்று நீதிமன்றத்திற்கு நான் கொடுத்த வேண்டுகோள் கடிதம் **அ.சா.ஆ 31**. மேற்படி உடல் உள்ளுறுப்புகளை மேற்படி ஆய்வகத்திற்கு அனுப்புவதற்காக நீதித்துறை நடுவர் கொடுத்த கடிதம் **அ.சா.ஆ 32**. மேற்படி வழக்குசொத்துக்களையும், உள்ளுறுப்புகளையும் மேற்படி ஆய்வகத்திற்கு அ.சா.23 மூலம் அனுப்பினேன். 29.01.2019 அன்று 14 மணியளவில் இவ்வழக்கின் எதிரிகளை தோப்பூர் விலக்கு பேருந்து நிறுத்தம் அருகில் அ.சா.14 மற்றும் அவரது உதவியாளரான பூலோகபாண்டி ஆகியோர் முன்னிலையில் கைது செய்து விசாரித்தபோது 1ம் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் 14.15 மணியளவில் பதிவு செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அதன் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ 6. அதன் அடிப்படையில் 1ம் எதிரி ஆஜர்படுத்திய எதிரிகள் சம்பவத்தின்போது பயன்படுத்திய இருசக்கர வாகனத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ 7. அந்த வாகனத்தின் புகைப்படங்கள் **அ.சா.ஆ 33 வரிசை** (எண்ணிக்கையில் 3). மேற்படி பேருந்து நிறுத்தத்தில் 2ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் 17 மணியளவில் பதிவு செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அதன்

அடிப்படையில் 2ம் எதிரி 29.01.2019 அன்று 18.30 மணியளவில் பிள்ளைவிளை ஊருக்கு வடபுறமாக பிரதான சாலையின் வடபுறம் பழை கட்டிடத்தின் பின்புறமாக மறைத்து வைத்திருந்த சம்பவத்தன்று எதிரிகள் இருவரும் பயன்படுத்திய வீல் ஸ்பேனரை ஆஜர்படுத்தியதை அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே குறியீடுசெய்யப்பட்ட அ.சா.ஆ 9. அந்த வீல் ஸ்பேனர் ஏற்கனவே குறியீடுசெய்யப்பட்ட சா.பொ.1. பிறகு வழக்கு சொத்துக்களுடன் எதிரிகளை நிலையம் கொண்டு வந்து எதிரிகளை வழிக்காவல் மூலம் 30.01.2019 அன்று காலை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களான இருசக்கர வாகனம் மற்றும் வீல் ஸ்பேனர் ஆகியவற்றை படிவம் 91ன் மூலம் மேற்படி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அதற்கனா கடிதம் **அ.சா.ஆ 34**. 30.01.2019 அன்று அ.சா.21, அ.சா.22, அ.சா.25 விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 31.01.2019 அன்று அ.சா.14 மற்றும் அவரது உதவியாளர் பூலோகப்பாண்டி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 02.02.2019 அன்று மேற்படி உடல் உள்ளுறுப்புகளையும், வழக்கு சொத்துக்களையும் வேண்டுகோள் கடிதம் கொடுத்து மேற்படி ஆய்வகத்திற்கு அ.சா.23 மூலம் கொடுத்தனுப்பினேன். 28.02.2019 அன்று 1ம் எதிரியின் மனைவியான அன்னாள் ஸ்டெபி, மற்றும் அ.சா.19, அ.சா.24 ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 08.03.2019 அன்று அறிவியல் அலுவலரான அ.சா.15–ஐ விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ 10 குருதி வடிநீரியல் அறிக்கை பெற்றேன். உடல் உள்ளுறுப்புகளை பகுப்பாய்வு செய்த அலுவலரான அ.சா.16–ஐ விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நஞ்சியல் அறிக்கையான அ.சா.ஆ 14–ஐ பெற்றேன். பிறகு அ.சா.17 மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு

செய்து காயம்பட்ட நபரின் விபத்து பதிவேட்டு நகலான அ.சா.ஆ 15–ஐ பெற்றேன். பிறகு  வில்வின் ரெஜிஷின் மரணத்தை உறுதிபடுத்திய அ.சா.18 மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ 17 இறப்பு தகவலைப் பெற்றேன். 28.03.2019 அன்று பிரேத பரிசோதனை செய்த மருத்துவரான அ.சா.20–ஐ விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். அதன் முதல் நிலை அறிக்கை அ.சா.ஆ 20. இறுதியறிக்கை அ.சா.ஆ 19. 08.06.2019 அன்று இவ்வழக்கின் 1ம் எதிரியின் கைபேசி எண், அவரது மனைவியின் கைபேசி எண் மற்றும் இறந்துபோன  வில்வின் ரெஜிஷின் கைபேசி எண் ஆகியவற்றை பெற்று காவல்துறை கண்காணிப்பாளர் மூலம் வேண்டுகோள் கடிதத்துடன் நோடல் அலுவலருக்கு அனுப்பி வைத்தேன். 17.07.2019 அன்று மேற்படி எண்களுக்கான உள்வெளி அழைப்புகள் அடங்கிய விபரங்களை அ.சா.ஆ 26 மூலம் பெற்றேன். பின்னிட்டு நான் பணியிடமாற்றம் செய்யப்பட்டதால் எனக்கு பிறகு வந்த ஆய்வாளர் திரு. சிவசங்கரன் தொடர் புலன் விசாரணை செய்து  மேற்படி சாட்சிகளை விசாரித்தபோது சாட்சிகள் என்னிடம் சொன்னதுபோலவே அவரிடமும் சொன்னதால் மேற்படி ஆய்வாளர் சாட்சிகளுக்கு மறு வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை. பின்னிட்டு உதவி இயக்குநர் குற்ற வழக்கு தொடர்பு துறை, தூத்துக்குடி அவர்களிடம் கருத்துரை பெற்று இந்த வழக்கை இதச பிரிவு 302 உ/இ 34ன் படி மாற்றம் செய்து அறிக்கை தயார் செய்தார். அந்த அறிக்கை **அ.சா.ஆ 35**. பிறகு இந்த வழக்கில் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இதச 302 உ/இ 34 பிரிவு படி இறுதியறிக்கை தாக்கல் செய்தார்.

குறுக்கு விசாரணை

வழக்கு ஆவணங்கள் அனைத்தையும் படித்து பார்த்தேன். சம்பவ இடத்திலிருந்து காவல்நிலையத்திற்கு நடந்து வந்தாலும் 10 நிமிடத்தில் வரலாம் என்றால் 20 நிமிடமாகும். சம்பவம் தொடர்பான தகவல் காவல்நிலையத்திற்கு அதிகாலை 1.30 மணியளவில் கிடைத்தது. இந்த வழக்கு சம்பந்தமான தகவல் 28.01.2019 அன்று அதிகாலை 3.30 மணியளவில் கிடைக்கப் பெற்று காலை 6.30 மணியளவில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. காலை 10 மணியளவில் முதல் தகவல் அறிக்கை நீதித்துறை நடுவரிடம் ஒப்படைக்கப்பட்டது. நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றும், காலை 6.30 மணியளவில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை மாலை 6.30 மணியளவில் நீதித்துறை நடுவரிடம் ஒப்படைக்கப்பட்டது என்றால் 18 மணியளவில் நீதித்துறை நடுவர் பெற்றுள்ளார். சம்பவ இடத்திற்கு அருகிலேயே காவல்நிலையம் இருப்பதால் அதிகாலை 3.30 மணியளவில் தகவல் கிடைத்ததாக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 28.01.2019 அன்று மாலை 5.30 மணியளவில் ஒரு புகார் கொடுத்ததாக சொன்னால் அது என் புலன் விசாரணைக்கு எதிரானது என்றால் சரிதான். அ.சா.1 இறந்துபோன நபருக்கு துாரத்து உறவு தம்பி முறை. அ.சா.9 மற்றும் 10 இறந்துபோனவரின் பெற்றோர் என்றால் சரிதான். அ.சா.1 க்கும் அ.சா.9 மற்றும் 10 க்கும் என்ன உறவு என்பதை நான் விசாரிக்கவில்லை. இறந்துபோன நபரும் அ.சா.1 ம் உறவினரே அல்ல என்றால் சரியல்ல. அவர்களுக்குள் உறவு முறை இல்லை என்பதால்தான் புகாரிலும், வாக்குமூலங்களிலும், சாட்சியத்திலும் அ.சா.1, அ.சா.9, அ.சா.10 உறவு முறை குறித்து எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 க்கும் இறந்துபோன நபருக்கும் கள்ளத்தொடர்பு இருந்ததை

மறைப்பதற்காகத்தான் துாரத்து உறவு, தம்பி முறை என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாக அ.சா.1–ஐ மாநாடு என்ற கிராமத்தில் இருந்து மக்கள் வெளியேற்றினார்கள் என்றால் சரிதான். எதற்காக அ.சா.1–ஐ வெளியேற்றினார்கள் என்று நான் விசாரிக்கவில்லை. அ.சா.1 க்கும், இறந்துபோன நபருக்கும் தவறான உறவு இருப்பதால்தான் அ.சா.1–ஐ அந்த பகுதி மக்கள் அந்த பகுதியிலிருந்து வெளியேற்றினார்கள் என்றால் சரியல்ல. அ.சா.1 தன் கணவரை பிரிந்து வாழ்ந்து வந்தார் என்றால் சரிதான். அ.சா.1 விவாகரத்து பெற்றுள்ளாரா என்று நான் விசாரிக்கவில்லை. அ.சா1 னின் கணவரை நான் சாட்சியாக விசாரிக்கவில்லை. நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், இறந்துபோன வில்வின் ரெஜிஷை அ.சா.1 ன் கணவர் தகாத உறவு காரணமாக கொலை செய்திருக்கலாம் என்றும், அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட தவறான வழக்கிற்காக நான் புலன் விசாரணை எதுவும் செய்யாமல் நிலையத்திலேயே அமர்ந்து கொண்டு ஆவணங்களை தயாரித்துள்ளேன் என்றும், எனக்கு பின்னால் வந்த ஆய்வாளரும் புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.02.18 17:53:33 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.